REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 21உ வெள்ளி (6—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 22உ சனி (7—12—57) [இதழ் 150

பொருளாதாரப் பிரச்சினை குறுக்கிடுகிறதாம்!

புதுடில்லி, டிச. 6—

நாட்டின் மூலை முடுக்குகளிளெல்லாம் 'தொலைபேசி' (டெலிபோன்) வசதியை உண்டாக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் விரும்புகிறதாம்; ஆனால் அதற்குப் போதிய பண வசதி இல்லையாம்! என்றாலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் 'தொலைபேசி' வசதியை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமாம்!

மக்கள் சபையில் அஞ்சல் தொலைவறி அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

'மாமியார் மனப்போக்கு வேண்டாம்'

'தென்னவர் இந்தியை எதிர்க்கின்றனர்'

'இந்தி பேசாத மக்களின் கருத்துக்கு மதிப்பளியுங்கள்'

'அவசரப்பட்ட முடிவு ஆபத்தானதாகும்'

டெல்லி சர்க்காருக்கு மேலும் பல நல்லறிவாளரின் எச்சரிக்கை

வல்லபாய் பட்டேல் தந்த உறுதிமொழியை கவனப்படுத்துகிறார் வி. பி. மேனன்

டெல்லி சர்க்கார் இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தியைத் திணிப்பதற்கு, தென்னாட்டைச் சேர்ந்த மேலும் சில நல்லறிவாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

பெங்களூரில் உள்ள பாசப்பா இடைநிலைக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், இந்திய சர்க்காரின் முன்னாள் மாநிலங்கள் இலாகா செயலாளரான வி. பி. மேனன, மைசூர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பி. எல். மஞ்சுநாத், டாக்டர் சிவராமன், வி. கிருஷ்ணமூர்த்தி, மைசூர் பாங்கியின் ஜெனரல்-மானேஜர், பி. வி. நாராயண ரெட்டி முதலியோர் கூடி, "ஆங்கிலத்திற்குப் பதிலாக ஆட்சிமொழியாக இந்தியை அவசரப்படுத்துத் திணிப்பது, இன்றைய நிலையில் இந்தியாவின் நலன்களுக்கு உகந்தது அல்ல" என்று எச்சரிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கின்றனர்.

வி. பி. மேனன்

"குறுகிய காலத்தில் அரசியல் சட்டம் ஒன்றைத் தயாரித்ததற்காக, தலைவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே; ஆனால் அவசரப்பட்டுச் செய்யப்படும் எந்தக் காரியமும், சில தீமைகளையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றன.

"சிந்திக்க நேரம் கிடைத்து, தங்களது முழு கவனத்தையும் செலுத்தியிருந்தால், சில பிரிவுகள் அரயசில் சட்டத்தில் இடம் பெற்றிருக்கவே முடியாது. அப்படிப்பட்ட பிரிவுகள் சில இப்போது அதில் இருக்கின்றன.

"நாம் இன்று இங்கு கூடியிருப்பது, நாம் அவசரத்தில் செய்துவிட்ட சில காரியங்களுக்காக, ஒய்வு கிடைக்கும் இந்த நேரத்தில் மன்னிப்புக் கோர, தவறுக்காக வருந்தித் திருந்தத்தான்.

"அரசியல் நிர்ணய சபையில் 'இந்த ஆட்சி மொழி விவகாரம் பற்றி கடுமையான விவாதம் நடைபெற்றது. எங்களிலே சிலர் குறிப்பாக தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கு 'நடைபெற்ற விவாதப் போக்குக்கண்டு மிகவும் கவலைப்பட்டோம். இந்தி வெறியர்கள் வெற்றி பெற்றுவிட்டால் அதனால் வரக்கூடிய விளைவுகளைப் பற்றியும் நாங்கள் மிகக் கவலைப்பட்டோம்.

"டாக்டர் அம்பேத்கார்கூட, இந்த ஆட்சி மொழி பற்றிய பிரிவு கட்சிக் கட்டுப்பாடு காரணமாகவும், தலைவரின் ஓட்டாலும்தான் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டது எனக் கூறியிருக்கிறார். ஆனால், இப்போது நம்மில் ஒவ்வொருவரும் சுதந்தரமாகக் கருத்தறிவிக்க உரிமைப் பெற்றிருக்கிறோம்.

"எனவே இன்று, தென்னாட்டு மக்களின் விருப்பத்திற்கு ஒப்ப, ஆட்சி மொழி பற்றிய முடிவை மீண்டும் புனர் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோருகிறோம்.

"ஆட்சி மொழிப் பிரிவு பற்றி, நான், காலஞ்சென்ற மந்திரி வல்லபாய் பட்டேலிடம் சென்று, ஆட்சி மொழி பற்றிய எனது கவலையையும், சந்தேகங்களையும் தெரிவித்தேன். அப்போது அவர், '15 ஆண்டுக்காலம் தரப்பட்டிருக்கிறது; எனவே, அந்தக் காலத்திற்குள் ஏதாவது உடன்பாடு காண முடியும்" என்று கூறினார்.

"ஆங்கிலத்தின்மீது நமக்கு வெறுப்பு ஏற்பட நியாயமே இல்லை. இந்தியையும், உருதையும் நமது செல்வமாக ஏற்றுக் கொள்ளும்போது, ஆங்கிலத்தையும் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

"ஆங்கிலத்தை அன்னியமொழி என்று கூறவேகூடாது; உலகெங்கிலும், ஆங்கிலேயரல்லாத பல நாட்டுக்காரர்கள், ஆங்கிலம் பேசுகிறார்கள்.

"எனவே, இப்போது இந்தியைக் கொண்டுவருவது, தென்னாட்டு மக்களில் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கு விரோதமானதாகும்."

டாக்டர் சிவராம்:

"இந்தி விஷயத்தில், மாமியார் நிர்ப்பந்தப் போக்கினைக் கையாளாதீர்கள்! இந்தி பேசாத மக்களின் கருத்துக்கு மதிப்பளியுங்கள்."

டாக்டர் பி. எஸ். மஞ்சுநாத்

"இப்போது ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவரத் தேவையே இல்லை. அவசரப்பட்டு மாற்றம் செய்வது ஆபத்தான விளைவுகளைக் கொண்டுவந்து சேர்க்கும்"

அமெரிக்க செயற்கைச் சந்திரன் விடப்பட்டதா?

பிளாரிடா, டிச. 6—

அமெரிக்க செயற்கைச் சந்திரன் 4—12—57 அன்று திட்டமிட்டபடி விடப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் ராக்கெட்டில் சில சிறு மாறுதல்கள் செய்யப்பட வேண்டியுள்ளதாம்; எனவே, சோதனை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

தடுப்புக்காவல் சட்டத்தை நீடிக்கும் மசோதா

மக்கள்சபையில் எதிர் கட்சியினர் வெளிநடப்பு

புதுடில்லி, டிச. 5—

டெல்லி சர்க்கார், தடுப்புக்காவல் சட்டம் என்ற கொடிய அடக்குமுறை ஆயுதத்தைப் புதுப்பிப்பதற்கு எதிர்க்கட்சியினர் பலத்த எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர்.

சட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கும் மசோதா மக்கள்சபையில் வந்தபோது, வெளிநடப்பு செய்து எதிர்க்கட்சியினர் தங்களின் கண்டனத்தைக் காட்டியுள்ளனர்.

மசோதாவைக் கொண்டுவருவதற்கு சபையில் 151 உறுப்பினர்கள் ஆதரவும், 50 உறுப்பினர்கள் எதிர்ப்பும் காட்டினர்; அனுமதி கிடைத்ததை அறிந்ததும் எதிர்க்கட்சியினர்--இரண்டொரு சுயேச்சைகளைத் தவிர்த்து—'வெட்கம்', 'வெட்கம்' எனக்கூறி வெளியேறினர்.

திராவிடர் கழகக் கிளர்ச்சி, இராமநாதபுரம் சம்பவங்கள், அண்மையில் நிகழ்ந்த குண்டு வீச்சு நிகழ்ச்சிகள், உளவாளிகளின் ஆபத்து இவற்றைக் காரணமாகக் காட்டி உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், சட்டம் நீடிப்பதை நியாயப்படுத்த முயன்றிருக்கிறார்.

புரட்சி சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த திரிதிப் குமார் சௌத்ரி எதிர்க்கட்சியினர் சார்பில் பேசுகையில், 'இரண்டாண்டுக்கு ஒருமுறை சட்டத்தை நீடித்துக்கொண்டிருப்பது பெரிய கேலிக்கூத்தாக இருக்கிறது; துணிவிருந்தால் இதனை நிரந்தரமான சட்டமாகவேதான் ஆக்கிவிட்டுமே சர்க்கார்! அதைவிடுத்து அவ்வப்போது நீடிப்பது என்பது வெறும் கேலிக்கூத்தல்லாமல் வேறென்ன?' என்று கேட்டிருக்கிறார்.

சென்னை ஆலைத் தொழிலாளர் 2,200 பேர் வேலை இழப்பது உறுதிதானும்!

கதவடைப்பு தவிர்க்க முடியாததாம்!

மக்கள் சபையில் மந்திரி உறுதி செய்கிறார்

புதுடில்லி, டிச. 5—

சென்னை எட்வர்டு நெசவு ஆலையில் வேலை செய்துவரும் 2200 தொழிலாளர்களுக்கும் சீட்டுக்கிழிவது உறுதிதானும்! ஆலை, வரும் டிச. 8-ந் தேதியுடன் மூடப்படுவது தவிர்க்கப்பட முடியாதாம்!

இதுபற்றி, தொழில் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின்கீழ் விசாரணைக்கு உத்தரவிடுவதினால் பலன் எதும் இல்லை என்றும், நஷ்டமேற்படுவதாலேயே ஆலை மூடப்படுகிறது என்றும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தொழில் மந்திரி நித்தியானந்த கனுங்கோ மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"ஆலை மூடப்படுவதற்காகக் கூறப்பட்டுள்ள காரணம் சரியானதுதானா என்று சர்க்கார் அறிந்ததா?"

என்று கேட்கப்பட்டபோது, "சென்னையில் உள்ள தொழில் நீதிமன்றம் இதுபோன்ற அம்சங்களைக் கவனித்திருக்கும்" என்று கூறினாராம் மந்திரி!

"மாற்று வேலை தர என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன?"

என்று கேட்கப்மட்டபோது, மந்திரி, "தொழில் தகாறு சட்டத்தின்கீழ் தொழிலாளருக்கு உரிய நஷ்டஈடு தரப்படும்" என்று மட்டும் பதிலளித்திருக்கிறார்!

இலங்கை வாழ் தமிழர் எதிர்காலம்

பண்டிதரும் பண்டாவும் விவாதித்தனராம்

புதுடில்லி, டிச. 5—

பண்டித நேருவும், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவும் இன்று சுமார் இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசினர்; அவர்கள் முக்கியமான பல பிரச்சினைகள் பற்றியும் குறிப்பாக இலங்கைவாழ் இந்திய வம்சாவழி மக்களின் எதிர்காலம் பற்றியும் பேசினர் என்றும் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, பண்டாவுடன் வந்துள்ள இலங்கை சர்க்கார் அதிகாரிகளும், இந்திய சர்க்கார் அதிகாரிகளும் உடனிருந்திருக்கின்றனர். இப்போது சாதாரணமாகக் கருத்துப் பரிமாற்றமே நடைபெறுவதாகவும், விரிவான பேச்சுவார்த்தைகள் பிறிதோர் நாள் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

வடநாட்டில் பற்றுக்குறைப் பிரதேசங்களுக்கு பஞ்சாபியர் தரும் அரிசி உதவி

சந்திகர், டிச. 4—

வடநாட்டில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உதவுவதற்காக மாநில சர்க்கார், பஞ்சாபில் ஒன்பது இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யத் திட்டமிட்டிருப்பதாக உணவு மந்திரி மோகன்லால் தெரிவித்திருக்கிறாராம்.

நவம்பர் இறுதி வரை 22 ஆயிரம் டன் கொள்முதலாகியிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். மத்திய சர்க்கார் உத்தரவுப்படி ஏற்கனவே ஒரு இலட்சம் மூட்டை அரிசி ஜம்மு—காஷ்மீருக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகவும், புதிய கொள்முதல் பம்பாய் மாநிலத்திற்கு அனுப்பப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'கஷ்டப்படும் நமது சகோதரர்களுக்காக பஞ்சாபியர் அரிசியை மிச்சப்படுத்தித் தரவேண்டும்' என, அந்த மந்திரி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 6—12—57 வெள்ளி

யார் அறிவர் அவர் மாயம்?

“பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் முறை இதுவரை இருந்து வந்ததுபோல், வயது வந்தோர் வோட்டுரிமை மூலம் நேரடித் தேர்தல் நடத்த வேண்டும் என்றும், பஞ்சாயத்து அங்கத்தினர்களைக்கொண்டே தலைவர் தேர்தல் நடத்த முடிவு செய்திருப்பதை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுவதுடன், சமீபத்தில் நிறைவேறிய திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் இருக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.”

இப்படி ஒரு தீர்மானத்தை, சென்னையில் நடைபெற்ற சென்னை மாநிலப் பஞ்சாயத்து நிறுவன மாநாடு நிறைவேற்றி வைத்திருக்கிறது. மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அனைத்திலும், இந்தத் தீர்மானம்தான் முக்கியமானது என்பதை நாம உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மேல்குமாரமங்கலம் ஊராட்சி மன்றத்தின் தலைவரான வி. கிருட்டினமூர்த்தி அவர்களாவார். இவரைக் குறித்து நமது அறிமுகம் தேவையே இல்லை.

இவர் கொண்டுவந்த தீர்மானத்தை, சென்னை மாநிலப் பஞ்சாயத்து நிறுவனத்தின் பொருள் ஆய்வுக் குழுவிலேயே ஒழித்துக்கட்ட, மேற்படி நிறுவனத்தின் தலைவரால் முயற்சிக்கப்பட்டதாம். தாமே தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்துகொண்டு, காங்கிரசு அமைச்சரவையினால் சட்டமாக்கப்பட்டதற்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள இத்தகு தீர்மானத்தை ஒப்ப முடியாது எனக் காரணமும் காட்டி, பஞ்சாயத்து நிறுவனத்தின் தலைவர், தீர்மானத்துக்கு ஆய்வுக் குழுவிலேயே கல்லறை கட்ட முயற்சித்தாராம். இருந்தாலும், மாநாட்டின் பொது அவைக்குத் தீர்மானம் வந்துவிட்டதுடன், தீர்மானம் நிறைவேறியுமவிட்டது.

தீர்மானத்தை எதிர்த்து இருவரே இருவர் பேசியுள்ளனர்; அறுவரே எதிராக வாக்களித்துள்ளனர். தீர்மானத்தின்மீது வாக்கெடுக்கப்பட்டபோது, மாநாட்டில் இருந்த அறுநூறு பிரதிநிதிகளுக்குமேல், தீர்மானதலை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் மட்டுந்தான், தம் இயல்புக்கு மாறான பொறுமையுடன், தீர்மானத்தின் இன்றியமையாமை குறித்து அமைதியாக விளக்கம் தந்தார். ஆனால் தீர்மானத்தை ஆதரித்துப் பேச வந்த மற்றப் பிரதிநிதிகளோ, மிகுதியான ஆவேசத்துடன் பேசியுள்ளனர்.

அதுவுமன்றி, தீர்மானத்தில் உள்ளடங்கியுள்ள கோரிக்கையை ஏற்க அரசாங்கம் தவறிவிடுமானால் அரசாங்கத்துக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் ஈடுபடும் அளவுக்குக்கூட பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் செல்லத் தயாராக உள்ளனர் என, அரசாங்கத்தை அச்சுறுத்தும் குரலில் தீர்மானத்தை ஆதரித்தவர்கள் பேசியுள்ளனர். அப்படி அரசாங்கத்தை எச்சரித்துப் பேசினவர்கள் அனைவரும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டிற்குத் தலைவரான முன்னாள் மேயர்கூட, இத்தீர்மானத்தை ‘மிக முக்கியத்துவம்’ வாய்ந்தது என்று மாநாட்டில் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார்.

தீர்மானத்தின் வாசகம் அரசாங்கத்தைக் கண்டிக்கும் போக்கில் அமைந்திருக்கவில்லை. பணிவுடன் வேண்டிக்கொள்ளும் முறையில்தான் அமைந்திருக்கிறது. எனவே, இந்தத் தீர்மானத்துக்கு மதிப்பளித்து, அண்மையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டத்திலுள்ள தலைவர் தேர்தல்முறை விதியை, தீர்மானக் கோரிக்கைக்கொப்ப திருத்தி அமைத்துக் கொள்ளுவதுதான் சென்னை அரசாங்கத்தின் கடமையாகும். அதுதான் மக்களாட்சி உணர்வும், அறமும், நேர்மையுமாகும்.

நடைபெற்ற பஞ்சாயத்து மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கும், தமிழகக் கிராம மக்களுக்கும் இருந்து வரும்நெருக்கமான தொடர்பை இதற்குமுன் எடுத்துக்காட்டி இருந்தோம். தமிழகக் கிராம மக்கள் சார்பில் பேசுவதற்கு முழு உரிமை கொண்டிருப்பவர்கள், பஞ்சாயத்து மாநாட்டில் கலந்து கொண்டவர்களைவிட வேறு யாரும் இருக்கமுடியாது என்றும் முன்னர் தெளிவாக்கி இருந்தோம்.

தமிழகக் கிராம மக்கள் சார்பில் பேசுவதற்குப் பஞ்சாயத்து மாநாட்டினருக்குள்ள தகுதியைக் குறித்து, நாம் கூறினதற்கு மேலாக, மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் பக்தவத்சலனார் அவர்களே தெளிவாகத் தெரிந்துகொண்டுள்ளார். தெரிந்துகொண்டிருப்பதுடன் அவர் இருந்துவிடாது, அவ்வுண்மையை, அவ்வமைச்சர் மாநாட்டிலேயே வெளிப்படையாகக் கூறுவதின் மூலம் ஐயத்திற்கிடமின்றி ஏற்றுக்கொணடும் உள்ளார்.

அதாவது, தமிழ் நாட்டையே மாநாட்டில் தாம் காண்பதாக அந்த அமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். அத்துடன், மாநாட்டில் பங்கு கொண்டுள்ளவர்களுடன்கலந்து சிந்திப்பதால் நல்ல பலன் ஏற்படும் என்றும் அதே அமைச்சர் அறிவித்தும் உள்ளார்.

எனவே, மாநாட்டில் ஆறே ஆறு நபர்களால் மட்டும் எதிர்க்கப்பட்டு, ஆறு நூறு நபர்களுக்கு மேற்பட்டவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை மதித்து நடந்துகொளள சென்னை அரசாங்கம் முன்வரும் என்றே நாம் நமபுகிறோம். அந்த நம்பிக்கையில்தான் மாநாட்டினரும் தீர்மானத்தை நிறைவேற்றி இருப்பார்கள் என்றும் எண்ணுகிறோம்.

செய்துவிட்ட சட்டத்தை உடனடியாகத் திருத்துவது இயலாது. அதற்குக் காலம் வேண்டும் என்கிற வாதம் நியாயமானதேயாகும். அந்த நியாயத்தை உணர்ந்துதான், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானததிலேயே அதற்குரிய வகையும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தச் சட்டத்தை உடனடியாகச் செயலாற்றாமல் நிறுத்தி வைக்கவேண்டும் என்ற யோசனை தீர்மானத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது.

திருத்தச் சட்டத்தை உடனடியாகச்செயலுக்குக்கொண்டு வாராது நிறுத்திவைப்பதால் குடிமுழுகிப்போவது ஒன்றும் கிடையாது. அதனால் அரசாங்கத்திற்கு வரவிருக்கின்ற ஆபத்தும் ஒனறுமில்லை.

கிராம மக்கள் பிரதிநிதிகளின் ஒருமனதான விருப்பத்திற்கு இணங்கி செயல்படவேண்டும் என்ற நல்லெண்ணமும், மக்களாட்சிமுறைக்கு மதிபபளித்து நடந்துகொள்ள வேண்டும் என்ற நல்லுணர்வும் காங்கிரசு அமைச்சர்களுக்கு, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த அளவிலாவது இருப்பது நல்லது. ஆனால் அமைச்சர்களாக இருப்பவர்கள் எப்படி நடந்துகொளளப் போகிறார்களோ? யார் அறிவர், அவர் மாயம்?

இந்தியாவில் அன்னியர் முதலீடு!

மந்திரி தரும் அரைகுறைக் கணக்கு

புதுடில்லி, டிச. 3—

‘1956-ம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் மாதங்களுக்கிடையில், இந்தியாவில் அன்னியநாட்டவர் ரூ 190 44 இலட்சம் முதலீடு செய்துள்ளனர்’ என்று, மாநிலங்கள் சபையில் உதவி நிதிமந்திரி பி. ஆர். பகத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இந்தக் கணக்கில், அன்னியக் கம்பெனி கிளைகளின் முதலீடு செய்யப்பட்டவையும், இலாபத்திலிருந்து முதலீடு செய்யப்பட்டவையும், எண்ணெய், சுத்திகரிப்புத் தொழில் இவற்றில் முதலீடு செய்யப்பட்டவையும், பொருள்களாக முதலீடு செய்யப்பட்டவையும் சேர்க்கப்படவில்லையாம்.

முதலீடு செய்யப்பட்ட மொத்தம் ரூ. 190·44 இலட்சத்தில், ரூ. 182·24 இலட்சம் உற்பத்தித் தொழில்களிலும், ரூ. 7·24 இலட்சம் வர்த்தகத்திலும், எஞ்சிய ரூ. 96,000 இதர துறைகளிலும் செய்யப்பட்டிருக்கிறதாம்.

உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்யப்பட்டதில் ரூ. 48 53 இலட்சம் சர்க்கரைத் தொழிலில்; ரூ. 45·76 இலட்சம் இரும்பு—உருக்கு; ரூ. 34 33 இலட்சம் மோட்டார் தொழில்; ரூ. 22 06 இலட்சம் கனரசாயனப் பொருள்கள்; ரூ 16·76 இலட்சம் துணி—ஆகிய தொழில்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

‘ஐந்தாண்டுத் திட்டம் திருத்தப்பட்டதா?’

மாநிலங்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, டிச. 5—

சமீபத்தில் நடந்த மாநில நிதி மந்திரிகள் மாநாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவைத் திருத்துவதற்கான பிரேரணைகள் விவாதிக்கப்பட்டனவா” என்று மாநிலங்கள் சபையில் கேட்கப்பட்டபோது ‘இல்லை’ என்று துணை அமைச்சர் பி. ஆர். பகத் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் அரிசி உற்பத்தி

டெல்லி மந்திரி தந்த கணக்கு தவறு!

சென்னை, டிச. 4—

தமிழ் நாட்டில் உணவு உற்பத்தி பற்றி, மத்திய மந்திரி மக்கள் சபையில் தந்த தகவல் தவறானது என்று தெரியவருகிறது.

1952-ம் ஆண்டிலிருந்து கணக்கிட்டுப் பார்த்தால், இப்போது உணவு உற்பத்தி 80 சதவிகிதம் அதிகரித்திருப்பதாக அவர் கூறினர்.

ஆனால் 1952-ம் ஆண்டில், தமிழ் நாட்டில் பெரும் புயல் வீசி, விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டு உற்பத்தியைக் கணக்கிலெடுத்துக்கொண்டு இப்போதைய உற்பத்தியுடன் ஒப்பிடலாகாது.

1952—53-ம் ஆண்டு, சாதாரணமான வருடமாக இருந்தது; அந்த ஆண்டு உற்பற்தியுடன் ஒப்பிட்டால், 1956—57-ம் ஆண்டு உற்பத்தி 23 சதவிகிதம் மட்டுமே உயர்ந்திருக்கிறது.

அசோக மேதா குழுவிடம் தரப்பட்ட அறிக்கைப்படி, கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ் நாட்டின் அரிசி உற்பத்தி கீழ்க்கண்டவாறு இருந்தது தெரியவரும் :—

1952—53 :	16,86,000 டன்
1953—54 :	25,72 000 ,,
1954—55 :	27,36,000 ,,
1955—56 :	29 53,000 ,,
1956—57 :	31,03,000 ,,

அரை நூற்றாண்டில் 12 கோடி அதிகரிப்பு

இந்திய மக்கள் தொகைக் கணக்கு

புதுடில்லி, டிச. 3—

இந்தியத் துணைக் கண்டத்தின் மக்கள் தொகை, கடந்த 50 ஆண்டுகளில் சுமார் 12.10 கோடி அதிகரித்துள்ளதாம்!

1910—11-ம் ஆண்டில் 135 இலட்சம்; 1921—31-ல் 270 இலட்சம்; 1931—41-ல் 390 இலட்சம்; 1941—51-ல் 420 இலட்சம்—என்ற அளவில் மக்கள் தொகைக் கணக்கில் அதிகரித்துள்ளதாம்.

1911—1921-ல் மட்டும், மக்கள் தொகைக் கணக்கில் முந்திய கணக்கெடுப்பைவிட ஓரளவு வீழ்ச்சி காணப்படுகிறது.

மாநில வாரியாக மக்கள் தொகை விவரம் வருமாறு :—

உத்தரப் பிரதேசம்: 630 இலட்சம்; பம்பாய்: 480 இலட்சம்; பீகார்: 380 இலட்சம்; ஆந்திரப் பிரதேசம்: 310 இலட்சம்; சென்னை: 300 இலட்சம்; மத்யப் பிரதேசம்: 260 இலட்சம்; மைசூர்: 190 இலட்சம்; பஞ்சாப்: 160 இலட்சம்; இராஜஸ்தான்: 160 இலட்சம்; மே. வங்கம்: 260 இலட்சம்; ஒரிசா: 140 இலட்சம்; கேரளம் 130 இலட்சம்; அசாம் 90 இலட்சம்.

இந்தியாவிலேயே நிலப் பரப்பில் மிகப் பெரிய மாநிலம் உத்தரப் பிரதேசமும், மிகச் சிறிய மாநிலம் கேரளமும் ஆகும்.

இந்தியாவில் மொத்தம் 5,58,088 கிராமங்களும், 3,018 நகரங்களும் இருக்கின்றன. பம்பாய் நகரில் மட்டும் 625 நகரங்கள் உள்ளன.

ரஷ்யாவிடமிருந்து இந்தியா பெற்றுளள கடன்

புதுடில்லி, டிச. 3—

“இந்திய அரசாங்கம் இதுவரையில் 5,000 இலட்சம் ரூபிள்கள் (ரஷ்ய நாணயம்) சோவியத் அரசாங்கத்திடமிருந்து கடனாகப் பெற்றுள்ளது” என்று மக்கள் சபையில் தொழில் அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

நீங்காத் தடை நீடிப்பு

சென்னை, டிச. 4—

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவைகள் போலீஸ் கமிஷனரின் முன்னனுமதியின்றி நடத்தக்கூடாதென விதிக்கப்பட்டிருக்கும் தடை உத்தரவு 20—12—57 வரை மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

உணவு விவாத முடிவுகள்

மக்கள் சபை தீர்மானம்

புதுடில்லி, டிச. 4—

நிலவரி முறையைச் சீர்திருத்தி அமைக்கவேண்டும்.

‘இலாபகரமாக இல்லாத நிலங்களுக்கு வரி கூடாது.

நிலவுடைமைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டும்.

அதிகப்படியாக உள்ள நிலத்தை நிலமில்லாத ஏழைகளுக்குத் தரவேண்டும்.

தரிசு நிலங்களை மீட்க 10 இலட்சம் பேர் கொண்ட படையை உருவாக்கவேண்டும்; அந்த நிலங்களில் கூட்டுறவு முறையில் விவசாயம் நடத்த வேண்டும்.

சிறுபாசனத் திட்டங்களுக்கான வேலைகள் தீவிரப்படுத்தப் படவேண்டும்.

எல்லா வளர்ச்சித் திட்டங்களையும் கிராம நிறுவனங்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் கொண்ட தீர்மானம், மக்கள் சபையில், உணவுப் பிரசினை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்டுள்ளது.

உயர்தர நெல் ரகங்கள் உற்பத்தி

உருவாக்குவதற்கு திட்டம்

புதுடில்லி, டிச. 4—

மழை பெய்யும்போது தண்ணீரில் மூழ்கிவிடுகிற பகுதிகளில் உவர் மண் நிலம், கார மண் நிலம் ஆகிய பகுதிகளில் பயிரிடத்தகுந்த நல்லாக நெல் ரகங்களையும், சீன முறைப்படி சாகுபடி செய்யத்தக்க பகுதிகளையும் ஆராய்ந்து, இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு திட்டங்கள் தயாரித்துள்ளதாம்.

விவசாயம், கால்நடை, பாரமரிப்பு, வைத்தியம், விஞ்ஞானம் முதலிய விஷயங்களை ஆராய 195 திட்டங்கள் அங்கீகரிக்கப் பட்டுள்ளனவாம்.

தென் மண்டலம்

ஒரு விவரம்

தமிழ் நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களை மட்டும் கொண்டு டெல்லி உருவாக்கியுள்ள தென் மண்டலம், 1,71,800 சதுர மைல் பரப்புடையது.

மக்கள் தொகை 8·49 கோடி.

பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு 42 46 சதவிகிதம்; ஆனால், அகில இந்திய விகிதம் 44·00 சதவிகிதம்.

மண்டலத்தில் ஆந்திரம் மட்டுமே உணவுத் துறையில் உபரியான உற்பத்தியுடையது.

இரண்டாம் திட்டத்தில் மண்டலம் முழுமைக்குமாக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 413·8 கோடி; முதல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது ரூ. 208 33 கோடி.

மண்டலத்தில் கல்வியறிவு பெற்றோர் தொகை 23 1 சதவிகிதம்; இதில் அகில இந்திய விகிதம் 16·6 சதம்தான்.

டெல்லிக்கு தென்னாட்டின் அறைகூவல்

டிச. 22: இந்தி எதிர்ப்பு மாநாடு

சென்னையில் சர்வகட்சித் தலைவர்கள் கூடுவர்

சென்னை, டிச. 5—

தென்னிந்திய யூனியன் ஆட்சி மொழிக் குழு அமைப்பாளர் திரு. எஸ் செல்லசாமி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார் :—

கடந்த 24—11—57-ந் தேதியன்று மயிலாப்பூர் சாஸ்திரி மண்டபத்தில், ராஜாஜி தலைமையில் பல கட்சிப் பிரதிநிதிகளும் கொண்ட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவருவதைத் தடுக்கவும், தென்னாட்டு நலன்களைப் பாதுகாக்கவுமான நோக்கத்துடன், ஆட்சிமொழிப் பிரச்சினையில் அக்கறைகொண்டவர்களை எல்லாம் கொண்ட மாநாடு ஒன்று கூட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1957 டிசம்பர் 22-ந் தேதியன்று காலை, மயிலை சாஸ்திரி மண்டபத்தில் திரு. சி. பி. இராமசாமி ஐயர் தலைமையில் அந்த மாநாட்டினை நடத்துவது என்றும், அதனைத் தொடர்ந்து அன்று மாலை கோகலே மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் ஏ. சுப்பையா, எஸ். செல்லசாமி, எஸ். நாராயணசாமி, எஸ். ஆர். வெங்கட்ராமன், வி. எஸ். எல். நாதன், திருமதி ஆனந்தராஜ், திரு. ஆனந்தராஜ் ஆகியோரைக் கொண்ட ஒரு அமைப்புக் குழுவும் உருவாக்கப்பட்டது.

மாநாட்டிற்கு வேண்டிய எல்லா முன்னேற்பாடுகளைச் செய்யவும் நகல் தீர்மானம் தயாரிக்கவும், வரவேற்புக் குழு அமைக்கவும், மாநாட்டிற்கு நிதி திரட்டவும் இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

குறைந்தபட்சமாக ரூ. 25 செலுத்துவோர் வரவேற்புக் குழு உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ளப்படுவர்.

இந்தப் பொதுப் பிரச்சினைக்கு ஆதரவு தரும் வகையில், அரசியல் வேறுபாடுகளைப்பற்றிக் கவலைப்படாமல், தென்னாடெங்குமிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டுமென அழைக்கப்படுகின்றனர்.

ஆர்வமுடையோர், 'அமைப்பாளர், என்-4, சந்திராபாக் அவினியூ, சென்னை-4' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

சென்னை மகளிர் மன்ற செயகுழுக் கூட்டம்

ஆண்டுவிழா பற்றிய முடிவுகள்

சென்னை மகளிர் மன்றச் செயற்குழுக் கூட்டம் 26-11-57 மாலை 6 மணிக்கு 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, மகளிர் மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது; டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., அவர்கள் தலைமை வகித்தார்.

மகளிர் மன்ற ஆண்டு விழாவினை மிகச் சிறப்புற விரைவில் நடைபெறச் செய்யவேண்டுமென்றும், அவ்விழாவின்போது மன்றத்தாரால் நடிக்கப் பெறும் 'சிலம்பு'— 'ஓடிவந்த இந்திப் பெண்' ஆகிய இரு நாடகங்களையும் நடத்துவதென்றும், ஆண்டு விழாவை ஜனவரித்திங்கள் முதல் வாரத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாடக சம்பந்தமான வேலைகளைக் கவனிக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டது; குழுவிலுள்ளோர்—தோழியர்கள்: வெற்றிச்செல்வி-அன்பழகன், கமலா-பாலசுந்தரம், பேச்சியம்மாள்-பொன்னுசாமி, சுலோசனா-சிற்றரசு, கிருஷ்ணவேணி-பாலன், தாமலைச்செல்வி, இராசம்மாள்; குழுவின் தலைவராக திருமதி பேச்சியம்மாள்-பொன்னுசாமி அவர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

மீனவருக்கு உதவி

ரூ. 5500 செலவிட அனுமதி

சென்னை, டிச. 3—

நவம்பர் முதல்வார மழையினால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட திருவொற்றியூர் பகுதி நான்கு மீனவர் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு, கட்டுமரம், நூல் விநியோகத்திற்காக ரூ. 5,500 செலவிட அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. அண்மையில் பெய்தமழையினால் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதில் அந்த நான்கு கிராமங்களும் வெள்ளக்காடாகியது என்றும், மீனவர்கள் தங்கள் கருவிகள் முதலியவைகளை இழந்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

புதுடில்லி, டிச. 3—

பம்பாய் மாநிலத்தில் இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு தனி நிறுவனம் ஏற்பட்டுள்ளதாம்; இது போலீஸ் இலாகாவிடமிருந்து பிரிந்து, அரசாங்க உள் விவகார இலாகாவின்கீழ் தனியாகப் பணியாற்றுமாம்.

நெல்லையில் சிறப்புக்கூட்டம்

இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்வார்.

★

8—12—57 காலை 9-மணியளவில், நெல்லை பாப்புலர் திரைப்பட அரங்கில், நகர தி. மு. க. நிதிக்காகவும், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காகவும் ஓர் சிறப்புக் கூட்டம், வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' என்ற பொருள்குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

நாகூர் அனீபா இன்னிசையும் உண்டு.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிசம்பர்

7 : மாலை—அம்பாசமுத்திரம்
இரவு—வீரகேரளம்புதூர்
8 : காலை—திருநெல்வேலி
நண்பகல்-ஏரல் (திருமணம்)
மாலை—ஆத்தூர் (நெல்லை)
இரவு—உடன்குடி
9 : மாலை—புதியம்புத்தூர்
இரவு—சிவத்தையாபுரம்
10 : மாலை—முசவூர்
11 : மாலை—மணப்பாறை
இரவு—இடையாற்றுமங்கலம்

குருடர் கல்வி

பார்வையற்றோருக்கான அரசாங்க இலவசக்-கல்வி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, எந்தக் குடும்பத்திலாவது பார்வையற்ற சிறுவர்—சிறுமியர் இருப்பின், அவர்களுடைய பெற்றோரோ, அல்லது அவர்கள்பால் அக்கறை கொண்டவர்களோ கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும் :—

காபிரியேல் செல்வராஜ்
மாவட்ட குருடர் கல்விப் பிரசாரகர்,
அலிபாய் வீடு, கோவிந்தசாமி பிள்ளை தெரு,
அஸ்தம்பட்டி P.O., சேலம்-1.

சென்னை — வண்ணையில்

நாவலர் படிப்பகத்

திறப்பு விழா

சென்னை-வண்ணாரப்பேட்டை சிரங்கம்மாள் தெருவில் நிறுவப்பட்டிருக்கும் நாவலர் படிப்பகத்தின் துவக்க விழா 1—12—57 மாலை, மேற்படி தெருவில் அழகுற அமைக்கப்பட்டிருந்த மேடையில் சிறப்புற நடந்தேறியது.

விழாவுக்குத் தோழர் இராசாபாதர் தலைமை வகித்தார்.

தோழர் இராதாமாணிக்கத்தின் இன்னிசைக்குப் பிறகு விழா துவங்கியது.

தோழர்கள் சேதுராஜ், அன்புரோசு, பி. எம். கருணாகரன், வி. டி. அரசு, எம். சத்தியநாதன், கோ. இறைமுடிமணி, என். சிவரத்தினம் ஆகியோர் நாவலர் படிப்பகத்தின் அவசியம் குறித்தும், தி. மு. கழக இலட்சியங்களை விளக்கியும் பேசினர்.

இறுதியாகத் தோழர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி எல்.எல்.ஏ. அவர்கள் சட்டசபை நிகழ்ச்சிகளை விவரித்தும், திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியம் குறித்தும் நீண்ட உரை நிகழ்த்தினர்.

தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு பல மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன. விருதை வியாபாரிகள் சார்பில் ஓர் வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டது.

தோழர் ஆசைத்தம்பி பேசி முடித்ததும் நன்றி கூறலுக்குப் பின் இரவு 10 மணிக்கு விழா முடிவுற்றது.

மிக நெருக்கடியான இடத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்து சொற்பொழிவுகளைக் கேட்டது குறிப்பிடத்தக்கது.

வேலூரில் சிறப்புக்கூட்டம்

அண்ணா கலந்துகொள்கிறார்

8—12—57 காலை 9 மணிக்கு, வேலூர் (வ. ஆ.) தோட்டப்பாளையம் தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக வேலூர் நேஷனல் தியேட்டரில், தோழர் எம். பி. சாரதி எம்.எல்.ஏ. தலைமையில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்களும் சொற்பொழிவாற்றுவர்.

கலைப் பொருட்கள்

ரூ. 4 இலட்சத்திற்கு வாங்கப்பட்டனவாம்

புதுடில்லி, டிச. 3—

தேசிய நவீன கலைமண்டபத்திற்காக 1956—57-ம் ஆண்டில் 447 கலைப்பொருட்கள் வாங்கியிருப்பதாக கல்வி இலாகா மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி மாநிலங்கள் சபையில் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நவம்பர் முடிய மேலும் 377 பொருள்கள் வாங்கப்பட்டிருப்பதாகவும், இதற்காக ரூ. 4 இலட்சம்வரை செலவிட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

ஊருக்கு உபதேசம்!

இராஜகோட்டை, டிச. 4—

"வெளி உதவியை நாடும் வழக்கத்தை மக்கள் கைவிடவேண்டும்; உள்நாட்டிலேயே வசதிகளைத் தேடிக்கொள்ளவேண்டும்; இதற்கு, மக்களின் மனப்பான்மை மாறவேண்டும்; வெளியார் உதவியை நாடும் மனநிலை அதிகரித்துவருவது வருந்துவதற்குரியதாகும்" என்று, காங்கிரஸ் பேரவைத் தலைவர் தேபர், நகர கல்லூரி மாணவர்களிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், ஆண்டுதோறும் 18 இலட்சம் பேர் தோன்றி வேலை கேட்பதாகவும், ஒரு தனி நபருக்கு வேலை தேடித்தர குறைந்தது ரூ. 5,000 முதலீடு செய்யவேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மீன் பிடிக்கும் படகுகள்

இயந்திரக் கருவிகள் அமைப்பு

சென்னை, டிச. 3—

நாட்டின் இப்பகுதியில் பயன்படுத்தப்படும் நாட்டு மீன்பிடிப் படகுவகைகளில் தூதுக் குடிரகப் படகுகளே இயந்திரக் கருவிகள் பொருத்துவதற்கு ஏற்றவை என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, பரீட்சார்த்த முறையில், ஒரு படகுக்கு மோட்டார் விசை அமைக்கப்பட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் ஒன்றுக்கு தவணை முறையில் பணம் செலுத்தும் அடிப்படையில் அது விற்கப்பட்டிருக்கிறது; மேற்கொண்டு இரு படகுகள் கட்ட அனுமதிக்கப்பட்டிருக்கிறது; ஒன்று இலாகா மூலமும், மற்றொன்று தனிப்பட்டவர்களாலும் ஒவ்வொன்றும் ரூ. 1,700 செலவில் கட்டப்படும். தொழில் நுட்ப உறவுத் திட்டத்தின்கீழ் கிடைக்கப்பெற்ற டீசல் எஞ்சின்கள் அவற்றில் பொருத்தப்படும்.

★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர்கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை 2—12—57 — தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★

நாஞ்சில் மாவட்ட

தி. மு. கழக 2-வது மாநாடு

டிசம்பர் 27, 28-ம் நாட்களில்

நாகர்கோயிலில் நடைபெறும்

★

டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்

தோழர் **ஈ. வெ. கி. சம்பத்** அவர்கள்

மாநாட்டிற்குத் தலைமை தாங்குகிறார்.

★

மதுரை டாக்டர் **எஸ். அருணாசலம்** எம்.பி.பி.எஸ். அவர்கள்

மாநாட்டினைத் திறந்து வைக்கிறார்.

அண்ணா, போதுச் செயலாளர் **இரா. நெடுஞ்செழியன்**

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

இரு நாட்களிலும் இசை அரங்கு - நாடகம் ஆகியவை உண்டு

—வரவேற்புக் குழு

★★★

மாநிலங்களுக்கு அரிசி, கோதுமை

புதுடில்லி, டிச. 6—

"1957 ஜனவரி முதல் அக்டோபர் வரையில் பல்வேறு மாநிலங்களுக்கும் மொத்தம் 19,22,400 டன் கோதுமையும், 6,32,800 டன் அரிசியும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது"

என்று மத்திய உணவு அமைச்சர் ஜெயின், மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

மதுரையில் சிறப்புக் கூட்டம்

8—12—57 காலை 10 மணிக்கு மதுரை பழனி டாக்கீசில் நகர தி.மு.க. சார்பில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன், 'அழிவும் ஆக்கமும்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

கே. ஏ. மதியழகன்

நிகழ்ச்சிகள்

டிச. 8: சென்னை—தொண்டையார்பேட்டை-நாடகம்
13: கோகலே மண்டபம்—(ஆங்கிலச் சொற்பொழிவு)
15: வேலூர்
22: தூத்துக்குடி

போட்டா போட்டியா?

மாஸ்கோ, டிச. 4—

ராக்கெட் குண்டுகள் உட்பட நவீன ஆயுதங்களை சீனக் கம்யூனிஸ்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பதாக சோவியத் அரசாங்கம் வாக்களித்துள்ளதாம்.

விமான ராக்கெட் குண்டுப் படைகளை சியாங்கே-ஷேக் ஆட்சி புரியும் பார்மோசா தீவுக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

நக்கீரர் பட்டி மன்றம்

7-12-57 மாலை 6-30 மணிக்கு பெத்துநாயக்கன்பேட்டை முருகேசமுதலித் தெரு 2 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் உ. செயராமன் தலைமையில் தோழர்கள் த. கோ. சந்தானம், செங்குட்டுவன் ஆகியோர், தென்னாட்டு அரசியல் என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றுவர்.

இலவச பால் விநியோகம்

8—12—57 காலை 9 மணியளவில் சென்னை—1, திருப்பள்ளித் தெரு, மக்கள் மனறப் பணிமனையில், சென்னை நகரசபை உறுப்பினர் தோழர் வி முனுசாமி அவர்கள் தலைமையில், இலவசப் பால் விநியோகம் துவக்கிவைக்கப்படும்; ஞாயிறு தோறும் இலவசமாகப் பால் வழங்கப்படும்.

ஊசூருக்கு அண்ணா வருகை

ஊராண்மைக் கழகம் வரவேற்கும்

ஊசூர், டிச. 5—

"இவ்வூருக்கு, 8—12—57-ல் வருகை தரவிருக்கும் அண்ணா அவர்களுக்கு, ஊராண்மைக் கழகச் சார்பில், மேற்படி கழக அலுவலகத்தில் ஓர் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது"

என்று, ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. எஸ். கந்தசாமி அறிவிக்கிறார்.

என். எஸ். கே. நினைவு மன்றத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம்

8—12—57 மாலை 6 மணிக்கு வட சென்னை இரத்தினசபாபதி முதலித் தெரு திடலில் (தொண்டையார்பேட்டைமணிக் கூண்டு அருகில்) மேற்படி நினைவு மன்றத் திறப்பு விழாப் பொதுக் கூட்டம் தோழர் பா. ம. கிருட்டினன் தலைமையில் நடைபெறும்; தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் கண்ணதாசன், தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., தோழர் சத்தியநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக உறுப்பினர்களுக்கு:

8—12—57 காலை 10 மணிக்கு மேற்படி படிப்பகத்தில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

மேலைச்சிவபுரி வள்ளுவர் மன்ற ஆண்டு விழா

7—12—57 பிற்பகல் 4 மணியளவில் மேற்படி மன்றத்தின் முதல் ஆண்டு நிறைவு விழா, திரு. கு. சிவசாமி அவர்கள் தலைமையில், மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்த் தொடக்கப்பள்ளியில் நடைபெறும்; அறிஞர்கள் பலர் விரிவுரையாற்றுவர்.

எம். என். ராய் நினைவு நாள்

சென்னை, டிச. 6—

சென்னை—நுங்கம்பாக்கம் எண் 11, குமரப்ப முதலி தெருவிலுள்ள சமூக நல மன்றத்தில் 8—12—57 காலை 9 மணிக்கு தோழர் எம். என். ராய் நினைவு நாள் கொண்டாடப்படும். விழாவில், எம். என். ராயின் வழி செல்பவர்கள், அனுதாபிகள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

7—12—57 மாலை 6 மணியளவில் சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை திருவளளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் தோழர் கே. எஸ். தினகரன் தலைமையில் 'தொழில்' எனும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

* * *

8—12—57 காலை 10 மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றச் சார்பில் தோழர் ந. செயராமன் தலைமையில், 'மொழி' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

7—12—57 மாலை 6 மணிக்கு எண் 64, சாலைவிநாயகர் கோயில் தெரு என். எஸ். கே. மன்றப் பணிமனையில், தோழர் எம். எல். தாஸ் தலைமையில் 'விடுதலை' எனும் பொருள் பற்றிப் பல தோழர்கள் பேசுவர்.

* * *

8—12—57 காலை 10 மணிக்கு சென்னை—வண்ணை சீரங்கம்மாள் தெரு, எண் 37, நாவலர் படிப்பகத்தின் சார்பில், தோழர் எஸ். பி. டி. திராவிடமணி தலைமையில் 'பொதுப் பணி' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

7—12—57 இரவு 10 மணியளவில், பழனி 11-வது வட்ட மஜீத் மன்ற உறுப்பினர்கள் சொற்பொழிவுக் கூட்டம் தோழர் சே. கிருஷ்ணமூர்த்தி எம் சி. தலைமையில் நடைபெறும்; 'அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

கற்பூரசுந்தர பாண்டியன் மறைவு

சிவகங்கை பிரபல வழக்கறிஞரும், நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. கற்பூர சுந்தர பாண்டியன் அவர்கள், தனது 78-வது வயதில், 4—12—57 பகல் 1 மணியளவில் இயற்கை எய்தினார்கள்.

இவ்வூர் பப்ளிக் பிராசிக்யூட்டர் கே. இராசசேகரன், கரூர் ஜில்லா முன்சிப் கே. சத்தியேந்திரன் ஆகியோர் அன்னாரின் புதல்வர்களாவர். அன்னார், வழக்கறிஞரும், திராவிட கழகப் பிரமுகருமான இரா. சண்முகநாதன் அவர்களின் சிறிய தகப்பனருமாவார். அன்னார். Evolution of South Indian Alphabets மற்றும், The Great Cholas போன்ற நூல்களின் ஆசிரியருமாவார்.

அன்னாரின் மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆ-ர்.

கழகக் கூட்டங்கள்

★

ஊசூர் (வ. ஆ.)

ஊராண்மைக் கழக வெளியில் 8—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஆர். பி. தனவேல்
பேசுவோர்:
அண்ணா
எம். பி. சாரதி எம்.எல்.ஏ.

★

உடன்குடி

மிஷன் ஆஸ்பத்திரி அருகில் 8—12—57 இரவு 8 மணிக்கு
தலைவர்: பொ. சாமுவேல்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
டி. ஆர். சுப்பிரமணியம்

★

சேலம் 23-வது வட்டம்

குண்டு பிள்ளையார்கோவில் தெரு 8—12—57 மாலை
தலைவர்: ப. சின்னுசாமி
பேசுவோர்:
எஸ். அப்பாவு
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. எஸ். மணி
கே. ஆர். மாசிலாமணி
கே. ஏ. வெங்கடாசலம்
பத்மய்யன்

★

தனுசுக்கோடி

8—12—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
க. அறிவழகன்
புகழேந்தி
நித்தியானந்தம்

★

திருமங்கலம்

(லால்குடி வட்டம்)
7—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எல். பி. தங்கவேல்
பேசுவோர்:
அன்பில்-தர்மலிங்கம்
கே. ஆர். பி. மணிமொழியன்
எஸ். நெடுமாறன்

★

சிதம்பரம்

டவுன் ஆல் திடலில் 8—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். மாணிக்கம்
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
டி. கே. கோபாலகிருஷ்ணன்
பொன்-சொக்கலிங்கம்
கூ. ஆறுமுகம்
செல்வி இளங்கோ
எல். என். இராமலிங்கம்
(மாலை 4-30 மணிக்கு தோழர் ப. து. இரங்கசாமி தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் உண்டு.)

★

தொனசம்பட்டி

(சேலம் மாவட்டம்)
அண்ணா திடலில் 9—12—57 மாலை 5½ மணிக்கு
தலைவர்: எம். பழனியப்பன்
பேசுவோர்:
ப. கண்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
க. கு. சின்னசாமி
அ. பாலு
மாலை 4-மணிக்கு ஊர்வலம் உண்டு.

★

மங்களம்-நத்தமேடு

தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
பாவடித் தோப்பில் 7—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: ஏ. செங்கோடன்
பேசுவோர்:
இரா. தாண்டவன்
சிற்றுளி-சுப்பிரமணியம்

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

வசதிப்படி காலையிலோ மாலையிலோ வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது

சென்ற வருட டிசம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட டிசம்பரில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்

டிசம்பர் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9-12-57

உள்ளத்தில் ஊறிஎழும் எண்ணங்களை வெளியிட மனிதன் வகுத்துக்கொண்ட வழிதான் மொழி. இதன் மூலம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நட்புறவு கொண்டு சமுதாய வாழ்க்கையை மனிதன் துவங்கமுடிந்தது. அந்நட்புறவு இவ்விருபதாம் நூற்றுண்டில் ஒரு நாட்டளவில் இருப்பின் பயனில்லை; உலகளவிற்கு ஏற்படவேண்டும். இதனை, உலகெங்கும் செல்வாக்குப் பெற்றுவிட்ட—பல கலை நூல்களையும் எளிதில் கற்க உதவுகின்ற—உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தைக் கொண்டுதான் செய்துகாட்ட முடியும். எனவே, எங்கள் கலை மன்றம் முழுத்திறமையுடன் ஆங்கில மொழிப் பயிற்சியளிக்க முன்வந்துள்ளது. இதை நேரில் அறிவீர்! அறிய வாரீர்!!

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்து கொள்க.

முக்கிய அறிவிப்பு:- கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும். 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.